**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.06
https://ngmtamil.in/

# நவீனத் தமிழ் சிறுகதைகளில் பழந்தமிழரின் நம்பிக்கைகள் மற்றும் அதற்கான தீர்வுகள்

**ச.பவித்ரா,** பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), திண்டல், ஈரோடு – 638012.
Email: Pavithrageetha1@gmail.com
**முனைவர் தி.ஹேமலதா,** நெறியாளர், உதவிப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், தமிழ்த்துறை,
வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
திண்டல், ஈரோடு – 638012 Email: Hemalatha.t@vcw.ac.in

**முன்னுரை**

மனித சமுதாயத்தில் நம்பிக்கை சார்ந்த செயல்பாடுகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. மனித சமுதாயத்தின் ஆரம்ப காலக்கட்டத்தில் இருந்தே பல்வேறு விதமான நம்பிக்கைகள் மக்களிடையே பரவலாக இருந்து வந்துள்ளன. அதில் முக்கியமாக இறை நம்பிக்கை, ஜோதிடம், சகுனம் போன்ற பல நம்பிக்கைகள் மனிதர் வாழ்வில் பின்னிப்பிணைந்துள்ளன. இந்த நம்பிக்கைகள் சங்க இலக்கியம் மற்றும் காப்பியங்களில் மட்டுமின்றி இக்கால இலக்கியங்களில் ஒரு பிரிவான நவீன தமிழ் சிறுகதைகளிலும் பிரதிபலிக்கின்றன.

இக்கால சமூக வாழ்வில் உள்ள தமிழரின் நம்பிக்கைகள் அதன் பல்வேறு வடிவங்கள் போன்றவை நவீன தமிழ் சிறுகதைகளில் எவ்வாறு சித்தரிக்கப்பட்டுள்ளன என்பதையும் மாற்றமடைந்த சமூக சூழலில் பாரம்பரிய நம்பிக்கைகளால் உண்டாகும் சமூக சிக்கல்கள் பற்றி இக்கட்டுரை ஆய்வு செய்கின்றது.

**ஆய்வு நோக்கம்**

நவீனத் தமிழ் சிறுகதைகளில் வெளிப்படும் பண்டைத்தமிழரின் நம்பிக்கைகளால் உண்டாகும் சமூகத்தாக்கம், இன்றைய சமுதாயத்தில் அதன் தொடர்ச்சி, மூடநம்பிக்கைகளால்; ஏற்படும் சமூக விளைவுகளையும் ஆராய்ந்து கண்டறிவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**சமூகத்தில் நம்பிக்கைகளின் பங்கு**

**எம்மனிதனும் தன்னுடைய வருங்காலம் எவ்வாறிருக்கும் என்பதை அறியும் ஆவலுடன் இருப்பான். தான் வாழ்வில் முன்னேற வேண்டும். மேன்மையான நிலையை அடைய வேண்டும் என்று எண்ணுவான். இதன் விளைவால் அவனிடம் நம்பிக்கையும் ஊக்கமும் பிறக்கும். இப்படி வாழ்வில் வளம் தேடுதல் பொருட்டு அவனையும் அறியாமல் யாதேனும் ஒன்றில் நம்பிக்கை வைத்தல் இயல்பாகிவிடுகிறது என்று நம்பிக்கை எவ்வாறு தோன்றியிருக்கலாம் என்பதை கோ.அருட்கலை அவர்கள் குறிப்பிடுகிறார்.[1]**

ஒரு செயல் நிறைவேற வேண்டும் என்று இறைவனை மனதில் நினைக்கிறோம். அந்த செயல் நிறைவேறிவிட்டால் கடவுள் நம்பிக்கை வீண்போகவில்லை என்று நினைத்து மகிழ்கிறோம். அதுவே அந்த செயல் நிறைவேறாவிட்டால் மூடத்தனம் என்று கூறிவிடுகிறோம். ஒரு மனிதன் பிறந்தது முதல் இறக்கும்வரை பல்வேறு நம்பிக்கைகளை கடந்து வருகிறான். பிறந்த குழந்தைக்குப் பெயரிடுவது, திருமணம் செய்வது, ஏன் ஒருவன் இறந்த பின்னரும் அவர் உடலை எடுக்க நல்ல நேரம் பார்ப்பது என்று நம்பிக்கை மனிதனோடு ஒன்றிக் கலந்துவிட்ட ஒன்றாகவே இருக்கிறது.

அறிவியலாளர்கள் விண்ணில் செயற்கைக்கோள்களைச் செலுத்த நல்ல நேரம் பார்ப்பதில்லை. ஆனால் சாதாரண மனிதர்கள் சகுனம் பார்த்தல், ஜோதிடம் பார்த்தல், போன்ற நம்பிக்கைகளின் மூலம் எதற்கும் தன்னிச்சையாக முடிவெடுக்க முடியாமல் நம்பிக்கையை நாடுகிறார்கள். இந்நம்பிக்கை காலப்போக்கில் குறைந்திருந்தாலும் அதன் அடிப்படை சிந்தனை இன்றுவரை தொடர்கிறது. இதன்மூலம் சமூக வாழ்க்கையில் நம்பிக்கைகளின் தாக்கம் தொடர்கிறது என்பதை அறியமுடிகிறது.

**பிற இலக்கியங்களில் பண்டைத்தமிழர் நம்பிக்கைகள் ஓர் பார்வை**

காலம்காலமாக பல்வேறு நம்பிக்கைகள் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகின்றன. அதில் சில,

- இறைவனுக்கு ஆடு, மாடு, கோழி போன்ற உயிர்களை பலி கொடுப்பது.
- வயதிற்கு வந்த பெண்ணிற்குப் பேய் பிடிக்காமல் இருக்க இரும்பு உலோகம் மற்றும் வேப்பிலையை கையில் கொடுப்பது.
- பூனை குறுக்கே ஓடினால் துன்பம் மற்றும் துரதிர்ஷ்டம் உண்டாகும் என நம்புவது.
- மேலும் தீய சக்திகளிடமிருந்து தங்களைக் காத்துக்கொள்ள தாயத்துக்கட்டுவது. என்று எண்ணற்ற நம்பிக்கைகள் இருந்துவந்துள்ளன.

சங்க இலக்கியங்களிலும் இந்துக்கள் தாயத்துக்களைப் பயன்படுத்திய செய்தி கூறப்பட்டுள்ளது. உதாரணமாக, சிறுவர்கள் விஷ்ணுவின் ஐந்து சின்னங்களாகிய சங்கு, சக்கரம், வாள், வில், கதை ஆகிய சின்னங்கள் பொறிக்கப்பட்ட தாயத்துகளைக் கட்டுவர். இதனால் குழந்தைகளை தீய சக்தி அண்டாது என்று தமிழர்கள் நம்பினர் என்ற செய்தியை

**முகிழ்நிலாத் திகழ்தரும் மூவாத் திங்கள்**
**பொன்னுடைத் தாலி யென்மகன் ஒற்றி.**[2]

என்னும் அகநானூற்றுப் பாடல் குழந்தைகள் ஐம்படைத்தாலி அணிந்ததை சுட்டுகிறது.

எந்த செயலும் தொடங்குவதற்கு முன் மனக்கசப்புகளை நீக்கி மகிழ்ச்சியான சூழலை உருவாக்கி செயல்பட்டனர் என்றும் நல்விழாக்கள் தெய்வ சடங்குகள் போன்றவற்றையும் நல்ல நாள் பார்த்து நடத்தியிருக்கிறார்கள் தமிழர்கள் என்பதை,

**சிறந்த நாளினிற் செற்றம் நீக்கிப்**
**பிறந்த நாள்வயின் பெருமங்கலமும்.** [3]

என்னும் தொல்காப்பியத்தின் பொருளதிகாரப் பாடல் மூலம் வெளிப்படுகிறது.

திருமணம் முதலியவற்றை நாள் பார்த்து, நிமித்தம் பார்த்து நடத்தியிருக்கிறார்கள் என்ற செய்தியை.

**கடிநகர் புனைந்து கடவுட் பேணிப்**
**படுமண முழவொடு பரூஉப்பணை இமிழ**

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

**வதுவை மண்ணிய மகளிர் விதுப்புற்றுப்.4**

என்று திருமணங்கள் சகுனம் பார்த்துதான் நடத்தப்பட்டன என்பதை அகநானூறு வெளிப்படுத்துகிறது. இப்பாடலில் ரோகிணி நட்சத்திரமும் சந்திரனும் கூடிய நாள்தான் திருமணத்திற்கான நல்ல நாள் என்று தமிழர்களால் நம்பப்பட்டு வந்தமையை வெளிப்படுத்துகிறது. இவ்வாறு பல்வேறு நம்பிக்கைகள் பண்டைத் தமிழர்களிடம் இருந்தது என்பதற்கு சங்க இலக்கியப் படைப்புகள் சான்றாதாரமாகத் திகழ்கின்றன.

**நவீனத் தமிழ் சிறுகதைகளில் பண்டைத் தமிழர் நம்பிக்கைகள்**

**விஜயதசமி – ந.பிச்சமூர்த்தி**

பண்டைத்தமிழர் வாழ்வில் விழாக்கள் மற்றும் அதற்கான சடங்குகள் போன்றவை முக்கிய இடம்பிடிக்கின்றன. பொங்கள் பண்டிகை, தீபாவளி, ஊர்த்திருவிழா போன்ற விழாக்களில் மேற்கொள்ளப்படும் சடங்குகள், பூஜைகள் போன்றவற்றால் இல்லத்தில் உள்ள தீமைகள் நீங்கி நன்மைகள் பிறக்கும் என்ற நம்பிக்கை பழந்தமிழர்களிடம் மட்டுமின்றி இன்றளவும் நம்பப்படும் ஒன்றாகவே திகழ்கிறது.

அவ்வகையில் விஜயதசமி என்ற சிறுகதையில் நவராத்திரி கொலு பண்டிகை விழாவில் உள்ள முக்கிய சடங்கான கொலு வைப்பது பற்றியும் கொலு வைத்து வழிபட்டால் வீட்டில் நன்மை பிறக்கும் என்ற நம்பிக்கை காலம்காலமாக நிலவி வருகிறது என்பதும் காட்டப்பட்டுள்ளது. இக்கதையில் ஏழ்மை நிலையில் வாழும் சின்னம்மாளின் மகள் எச்சுமுவிற்கு தங்கள் வீட்டிலும் கொலு வைக்க வேண்டும் என்ற ஆவல் ஏற்படுகிறது. ஆனால் வறுமையினால் எச்சுமுவின் ஆசையை சின்னம்மாவாள் நிறைவேற்ற முடியவில்லை. ஆதலால், சின்னம்மா வேலைக்காரியாகப் பணிபுரியும் ராஜாமணி அம்மாளின் வீட்டில் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் கொலுவைப் பார்க்கிறாள். கொலு வைப்பதற்கானப் பின்னணியைக் கேட்டுத் தெளியும்போது கொலு வைத்தால் வீட்டில் நன்மை பிறக்கும் என்று கூறியதை நினைத்து எங்கள் வீட்டில் கொலு வைக்கவில்லையே எங்களுக்கு கெட்டது நடக்குமா? என்று ராஜாமணி அம்மாளிடம் கேட்கும் காட்சி சமூகத்தில் ஆழமாகப் பதிந்திருந்த பாரம்பரிய நம்பிக்கைகளை வெளிப்படுத்துகிறது. இந்த நம்பிக்கையே அவளை கொலு பொம்மையை யாருக்கும் தெரியாமல் எடுத்துச்செல்லத் தூண்டுகிறது

கொலு என்பது வெறும் பொம்மையல்ல. அது இறைநம்பிக்கை மற்றும் குடும்பநலனோடு தொடர்புடைய பண்பாட்டு மரபாக கருதப்பட்டதை இக்கதை எடுத்துரைக்கிறது. தமிழர்களின் விழாவில் தெய்வ நம்பிக்கைகள் தொடர்வதை விஜயதசமி என்ற சிறுகதை உணர்த்துகிறது.

**விடியுமா – கு.ராஜகோபாலன்**

மனிதனின் மனதில் இக்கட்டான சூழ்நிலையிலும் கூட சகுன நம்பிக்கை, தெய்வ நம்பிக்கை மற்றும் சுமங்கலி குறியீடுகள் போன்றவை இயல்பாகத் தோன்றுகி;ன்றன என்பதை விடியுமா என்ற சிறுகதையில் கு.ராஜகோபாலன் வெளிப்படுத்தியுள்ளார். சிவராமையர் ஆபத்தான நிலையில் உள்ளார் என்று தந்தி வந்ததும் மனைவி குஞ்சம்மாள் மன அழுத்தத்திற்கு உள்ளாகிறாள். உன் சொந்த ஊரிலிருந்து கணவரை சந்திக்க சென்னைக்குப் புறப்படும் முன் அவரது தாயார் நல்ல நேரம் பார்த்து அனுப்புவது, தெய்வங்களுக்குப் பூஜை செய்து மஞ்சள் துணியில் காணிக்கைக் கட்டி, மஞ்சள், குங்குமம், பூ, வெற்றிலைபாக்கு போன்றவற்றை மடி நிறைய கட்டிக்கொடுத்து அனுப்புகிறாள். இந்நிகழ்வானது மனிதரிடம் சகுன நம்பிக்கை, தெய்வ நம்பிக்கை மற்றும் சமூகத்தில்

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

நிகழும் சுமங்கலி அடையாள நம்பிக்கை போன்றவற்றை எடுத்துரைக்கிறது. இவை அனைத்தும் கணவனின் ஆயுள் நீடிக்க வேண்டிய மங்கல சின்னங்களாகக் கருதப்பட்டன.

இரயிலில் பயணம் செய்யும்போது மற்றொரு பெண் மல்லிகைப்பூ கொடுக்கும் நிகழ்வு கதையின் முக்கிய நம்பிக்கைச் சின்னமாகத் திகழ்கிறது. தமிழர் வாழ்வில் மல்லிகைப்பூ ஒரு மங்கலச் சின்னமாகக் கருதப்படுகிறது. இதனால் குஞ்சம்மாள் தனது கணவருக்கு ஒன்றும் ஆகாது என்று மனஅமைதியடையும் நிலை காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு தமிழர் நம்பிக்கைகள் மக்களின் வாழ்வில் இன்னும் உயிர்ப்புடன் உள்ளன என்பதை இக்கதையின் மூலம் அறியமுடிகிறது.

**மீன் சாமியார் - எம்.எஸ்.கல்யாண சுந்தரம்**

இக்கதையில் மக்களின் சகுன நம்பிக்கை மற்றும் சாமியார்கள் மீது கொண்டுள்ள கண்மூடித்தனமான பக்தியால் மக்கள் ஏமாறும் நிலையை படம் பிடித்துக் காட்டுகிறார். சம்பாசிவம் என்பவர், சாமியார் வேடமிட்டு அப்பகுதியில் வாழும் மீனவர்களிடம் தான் அதீத சக்தி படைத்தவன் என்பதைப்போல் காட்டிக்கொள்கிறான். இந்த போலி சாமியாரோ தன்னிடம் வருபவர்களின் கையில் கல், கிளிஞ்சல் மற்றும் ஒரு துண்டுச்சீட்டில் சில எழுத்துக்களை எழுதிக்கொடுப்பான். இதன்மூலம் மக்கள் அவனை முழுவதும் நம்ப ஆரம்பித்தார்கள். காணிக்கைகளை அள்ளி வழங்க ஆரம்பித்தார்கள். இக்கதையில் போலி சாமியார்கள் மக்கள் நம்பிக்கையைப் பயன்படுத்தி சமூக செல்வாக்கு பெறும் அவலநிலை வெளிப்படையாகக் காட்டப்படுகிறது. இவ்வாறு தமிழர் நம்பிக்கை குறித்து பல அறிஞர்கள் சிறுகதைகளைப் படைத்துள்ளனர். அவ்வரிசையில், அறிஞர் அண்ணா அவர்களும் நம்பிக்கை மற்றும் மூடநம்பிக்கையால் மக்கள் அவதிக்குள்ளாகும் நிலையை எடுத்துரைக்கிறார். அவர் எழுதிய **அன்னதானம்** என்ற சிறுகதையில் போலி சாமியார் மீது கொண்ட நம்பிக்கையால் மக்கள் ஏமாற்றப்படும் நிலையும், **கடவுள் தண்டிப்பார்** என்ற சிறுகதையில் பல அக்கிரமங்கள் ஏமாற்றங்கள் நடந்தாலும் மக்கள் எதிர்த்து கேள்வி கேட்காமல் கடவுள் தண்டிப்பார் என்று விட்டுவிடுகிறார்கள். இதன்மூலம் கடவுள் மீது கொண்ட நம்பிக்கை வலுவானது என்று மக்கள் மனதில் ஆழமாகப் பதிந்துள்ளது என்பது தெரியவருகிறது. இவ்வாறு பல எழுத்தாளர்கள் நம்பிக்கைகள் குறித்த விழிப்புணர்வை தனது சிறுகதைகளில் வெளிப்படுத்தி மக்களை விழிப்படைய வைத்திருக்கிறார்கள் என்றே கூறலாம்.

**நம்பிக்கைகளால் உண்டாகும் சமூக சிக்கல்கள்**

நம்பிக்கைகள் மற்றும் பழக்கவழக்கங்கள் போன்றவற்றால் மக்கள் ஈர்க்கப்பட்டுள்ளனர். மேலும் அத்தகைய நம்பிக்கைகளைப் பின்பற்றவில்லையென்றால் தெய்வகுத்தமாகும் என்று அஞ்சுகிறார்கள். ஜோதிடம் மூலம் பணமிழப்பது, எண்ணற்ற பரிகாரங்கள் செய்து உடலை வருத்திக்கொள்வது போன்றவையால் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்.

விஜயதசமி என்ற சிறுகதையிலும் நவராத்திரி கொலு கொண்டாட முடியாத ஓர் ஏழ்மையான குடும்பத்தின் வலியும், தன் குழந்தையின் ஆசையை நிறைவேற்ற முடியாத தாயின் தவிப்பும் தெளிவாகத் தெரிகிறது. திருவிழா மற்றும் பண்டிகை காலங்களில் உறவினர்களோடு சேர்ந்து மகிழ்;ந்திருத்தல், பலகாரங்கள் உண்ணுதல் போன்ற இனிமையானத் தருணங்களே நினைவிற்கு வரும். ஆனால், இக்கதையின் மூலம் ஏழ்மையான பல குடும்பங்களில் திருவிழா மற்றும் பண்டிகைகள் பெரும் சுமையாகவே பார்க்கப்படுகிறது என்பதும், தன் குழந்தையின் மனவேதனையைத் தாங்கிக் கொள்ள முடியாத தாயின் மனவேதனையும் வெளிப்படுகிறது.

இக்கதையில் மட்டுமின்றி நிகழ்கால வாழ்விலும் இவ்வாறான நிலையில் தவிக்கும் எண்ணற்ற குடும்பங்கள் உள்ளன என்பதே நிதர்சனமான உண்மை.

**மூடநம்பிக்கை நிகழ்வுகள்**

ஆணிமேல் நிற்க வேண்டும், அலகு குத்த வேண்டும், மண்சோறு உண்ண வேண்டும் என்று உடல்நலத்தை பாதிக்கும் செயல்களை செய்யச் சொல்லி பரிகாரம் என்ற பெயரில் பணத்தை வசூலித்துவிடுகிறார்கள். அடுத்ததாக இறைவன் பெயரைச்சொல்லி உயிர்பலி கொடுப்பது, ஆடு, மாடு, கோழி போன்ற உயிர்களை மட்டுமின்றி மனிதர்களையும் நரபலி கொடுத்த பல நிகழ்வுகளை நாம் செய்திகளில் பார்த்திருக்கிறோம்.

உத்திரபிரதேசம், பீகார் போன்ற வடமாநிலங்களில் மூடநம்பிக்கையின் உச்சத்தில் மனிதர்கள் நரபலி கொடுக்கப்பட்ட சம்பவங்கள் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தின. கேரளத்தில் இரண்டு பெண்கள் நரபலி கொடுக்கப்பட்டனர். அதுமட்டுமின்றி தமிழ்நாட்டிலும் கூட மந்திரம் மாந்திரீகத்தில் ஈடுபட்டதாகச் சிலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அசாம் மாநிலத்தில் பெற்றோரே தங்கள் குழந்தைகளை நரபலி கொடுத்த சம்பவமும் நடந்தேறியிருக்கிறது. இவ்வாறாக பல்வேறு மூடநம்பிக்கைகளால் மக்கள் அவதிப்படும் நிலை தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

**நம்பிக்கைகள் மற்றும் மூடநம்பிக்கைகள்**

நம்பிக்கை என்பதில் பலவகையுண்டு. ஒருவர் மீது அளவுகடந்த அன்பினால் நாம் வைக்கும் நம்பிக்கை, அவரவர் தன் திறமைமேல் உள்ள நம்பிக்கை, நம் பயத்தைப் போக்க நம்மை நாமே தேற்றிக்கொள்ளும் தன்னம்பிக்கை இவ்வாறு சொல்லிக்கொண்டே போகலாம். நம் பண்டைத் தமிழர்களின் பழக்கவழக்கங்கள் சடங்குகள் அனைத்தையும் பின்பற்றுவது மூடத்தனம் என்று கூறவில்லை. ஒரு சில சடங்குகள் பின் ஒளிந்துள்ள அறிவியல் உண்மைகள் நம்மை வியக்கவைக்கும். ஆனால், தேவையற்ற அளவுகடந்த இயற்கைக்கு அப்பாற்பட்ட அறிவியலிற்குப் புறம்பான நம்பிக்கைகளே மூடநம்பிக்கைகள்.

மூடநம்பிக்கை என்று நாம் பெரும்பாலும் கூறுவது அதிர்ஷ்டம் தாயத்துகள் பேய், பிசாசு, ஆவிகள், எதிர்கால கணிப்புகள், சூனியம், மாந்திரீகம், ஜோதிடம், கடவுள் மீதுள்ள அதீத நம்பிக்கை இவையெல்லாம்தான். எந்தவொரு கருத்தாக இருப்பினும் ஏன், எதற்கு, எப்படி என்று அறிவியல் கண்ணோட்டத்துடன் அணுகி அதன் பின்புலத்தை அறித்துகொள்ள வேண்டும். அதைவிடுத்து கண்மூடித்தனமாக நம்பி பின்பற்றினால் அதுவே மூடநம்பிக்கையாகும்.

**மூடநம்பிக்கைகளும் அதற்கான தீர்வுகளும்**

மக்கள் மூடநம்பிக்கைகளையும் அதன் நடைமுறைகளையும் மரபுரிமைகளாக வளர்த்துக் கொண்டே வருகின்றனர். இதன்மூலம் அடுத்த தலைமுறையினருக்கும் அந்த மூடநம்பிக்கை உணர்வு ஏற்படுகிறது. கல்வி இல்லாமையும் மூடநம்பிக்கை ஏற்பட காரணமாகத் திகழ்கிறது. **சகுனம் பார்ப்பது என்பது மிக முட்டாள்தனம். பொருத்தம் பார்க்;கும் சோதிடனுக்கு ஆணையோ பெண்ணையோ தெரியாது. இருந்தாலும் பொருத்தம் பார்க்கிறார்கள். இரண்டு ஆண்களின் சாதகத்தையோ, இரண்டு பெண்களின் சாதகத்தையோ கொடுத்தால் இவை பொருத்தமற்றவை என்று எவனாவது கூற முடியுமா**[5] என்று பெரியார் கேள்வியெழுப்பியுள்ளார். இத்தகைய பகுத்தறிவு சிந்தனையோடு மக்கள் அனைவரும் சிந்திக்க வேண்டும். அறிவியலிற்கு அப்பாற்பட்ட விசயங்களுக்கு உடலை வருத்திக்கொள்ள வேண்டுமா என்று ஒரு கணம் நினைத்துப்பார்க்க

வேண்டும். சமுதாயத்தில் சில பழக்கவழக்கங்கள் ஏன் செய்கிறோம் என்று தெரியாமலே காலம்காலமாக பின்பற்றி வருகிறோம். இத்தகைய சடங்குகளை சுய சிந்தனையின்றி கண்மூடித்தனமாக நம்புவது தவறு செய்வதும் தவறு என்பதை உணர வேண்டும்.

**ஆய்வு முடிவுரை**

பண்டைத் தமிழரின் நம்பிக்கைகள் வெறும் சடங்குகள் மட்டுமல்ல. அவை மனித சமுதாயத்தோடு நெருங்கிய தொடர்புடையவையாக அறியப்படுகின்றது. மேலும் நம்பிக்கை மற்றும் மூடநம்பிக்கைக்கான வேறுபாட்டை உணர்ந்து செயல்பட வேண்டும் என்றும், சடங்குகள் மற்றும் நம்பிக்கைகள் பண்பாட்டு அடையாளமாகத் திகழ்ந்தாலும் பகுத்தறிவற்ற நம்பிக்கைகளால் சமூக முன்னேற்றம் தடைபடும் என்பதையும், மக்கள் பகுத்தறிவு சிந்தனைனையை வளர்த்துக் கொள்ளுதல் அவசியம் என்பதும் இவ்வாய்வில் ஆராய்ந்து கூறப்பட்டுள்ளது.

**அடிக்குறிப்பு**

1. தமிழர். பண். நம்பிக்கை - பக்க எண்:22
2. அக. களிற்றியானை நிரை - பா.எண்:15 பக்க எண்:120
3. தொல்.பொருள் - பா.எண்:297 பக்க எண்:521
4. அக.மணிமிடைபவளம் - பா.எண்:136 பக்க எண்:35
5. தந்தை.பெரியார் சிந்தனைகள் - பக்க எண்:73

**துணைநூற்பட்டியல்**

[1]. அருட்கலை, கோ. *தமிழர் பண்பாட்டில் நம்பிக்கை*. அருள்நிலைப் பதிப்பகம், 1995.

[2]. சுப்புரெட்டியார், ந. *தந்தை பெரியார் சிந்தனைகள்*. யாழ் வெளியீடு, 2001.

[3]. குழந்தை, புலவர். *தொல்காப்பியம் பொருளதிகாரம்*. வேலா பதிப்பகம், 1968.

[4]. புலியூர்க்கேசிகன். *அகநானூறு மணிமிடைபவளம் மூலமும் உரையும்*. சாரதா பதிப்பகம், 2010.

[5]. வேங்கடசாமி நாட்டார், ந. மு. *அகநானூறு களிற்றியானைநிரை*. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1943.